1971 ஜூலை 23]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கோவில் சிற்பங்கள், சிலைகள் கொண்ட கலைக் கூடம் மீனாட்சி அம்மன் கோயில் மண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. மாவட்டத்தில் இருக்கும் பல்வேறு சிலைகள் எல்லாம் கொண்டு வரப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை மாநகரத்தில் எப்படி கலைக்கூடம் நிறுவப்பட்டிருக்கிறதோ அதைப் போன்று மீனாட்சி அம்மன் கோவில் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. திருமலை நாயக்கர் மகாலில் கலைக் கூடம் அமைக்கவும், கலைப் பூங்கா அமைக்கவும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. கு. திருப்பதி: திருமலை நாயக்கர் மகாலில் ஒலி—ஒளி ஏற்பாட்டை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: திருமலை நாயக்கர் மகாலைவிட மீனாட்சி அம்மன் கோயிலில் பரந்த மண்டபங்கள் இருக்கின்றன. டெல்லியில் செங்கோட்டைக்குப் போய்ப் பார்த்தவர்களுக்கு இதற்கு எப்படிப்பட்ட இடவசதி தேவைப்படும் என்று தெரியும். பாண்டியர் வரலாறு, நாயக்கர் வரலாறு ஆகியவற்றை எல்லாம் மீனாட்சி அம்மன் கோயில் மண்டபங்களை அடிப்படையாக வைத்துக் காட்டலாம். இதைப்பற்றி ஆராய்ந்த குழுவினர் இரண்டு இடங்களையும் பார்த்துவிட்டு மீனாட்சி அம்மன் கோயில் மண்டபங்கள்தான் இதற்கு ஏற்றவையாக இருக்குமென்று தெரிவித்திருக்கிறார்கள். சுற்றுலாக் குழுவினர் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: திருமலை நாயக்கர் மகாலில் தற்போது நீதிமன்றங்கள் இல்லாத காரணத்தால் அது பழுதடையக் கூடிய நிலைக்கு வந்திருக்கிறது. ஆகவே, கலைக்கூடத்தை ஆரம்பிப்பதில் துரித நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: திருமலை நாயக்கர் மகால் தமிழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ்தான் இருக்கிறது. விரைவில் மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து தக்க நடவடிக்கை எடுக்கும்படி கூறப்பட்டிருக்கிறார்கள்.

பாண்டித்துரைத் தேவரின் இல்லம்

* 392 வினு.—திரு. க. சுப்பு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரத்திலுள்ள, தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் அவர்கள் வாழ்ந்து வந்த இல்லத்தை, அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கப் பயன்படுத்தும் உத்தேசம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. க. சுப்பு: வ.உ.சி., பாரதியார் போன்றவர்களுடைய இல்லங்களை அவர்களுடைய நினைவுச் சின்னமாக அமைத்தது போல் தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் இல்லத்தையும் அவருடைய நினைவுச் சின்னமாக ஆக்க அரசு முன்வருமா?

[1971 ஜூலை 23

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எட்டையபுரம் பாரதி யாருடைய வீடுதான் அண்மையில் எடுக்கப்பட்டது. அவர் சென்னை யில் வாழ்ந்த வீட்டை அரசாங்கம் நினைவுச் சின்னமாகப் பயன்படுத்த முயன்று கொண்டிருக்கிறது. பாண்டித்துரைத் தேவர் அவர்களைப் பொறுத்தவரை அந்த ஊர் மக்களும், மற்றவர்களும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். கட்டடம் இருக்கிறதா, அந்தக் கட்டடத்தைத் தரத் தயாராக இருக்கிறார்களா என்பதை எல்லாம் ஆராய்ந்து மக்கள் முயற்சி எடுத்து அரசுக்குத் தெரிவித்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. கா. காளிமுத்து : இப்போதுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கம் பாண்டித்துரைத் தேவர் அவர்களால் நிறுவப்பட்டது. மதுரை செந்தமிழ்க் கல்லூரியைப் பாண்டித்துரைத் தேவர் செந்தமிழ்க் கல்லூரி என்று பெயரிட்டு அழைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயர் இலங்க வேண்டுமென்று செய்தவரே பாண்டித் துரைத் தேவர் ஆவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் பெயரிடப்பட்டது நான்காவது தமிழ்ச் சங்கம் என்று கூறுவார்கள். பாண்டித்துரைத் தேவர் அவர்களால் இடப்பட்ட அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியமில்லை. வேறு எந்த வகையிலாவது அவருடைய நினைவை நிலைநிறுத்தும் வகையில் முயற்சிகளைச் செய்தால் அது பற்றி யோசிக்கலாம். அந்தப் பெயரை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

காவிரிப்பூம்பட்டினம்

* 393 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடல்கொண்ட பண்டைய காவிரிப்பூம்பட்டினத்தை அகழ் ஆராய்ச்சி செய்திட மத்திய அரசினை நமது தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, பூம்புகார் அகழ் ஆராய்ச்சி நடத்த மத்திய அரசு முன் வராவிட்டாலும் ஐ.நா. கலாசார அமைப்பின் நிதி உதவி பெற்றாவது நடத்த மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பூம்புகார் பட்டினத்தைப் பொறுத்தவரையில் அகழ்வாராய்ச்சி செய்யச் சொல்லி தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அது வெற்றியும் பெற்று இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடலையே அகழ்ந்து ஆராய்ச்சி நடத்த நடவடிக்கைகள் எடுப்பார்களா என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு மத்திய தொல்பொருள் ஆராய்ச்சிக் குழு அந்தப் பணிகளைச் செய்யவேண்டி இருக்கிறது. அந்தக் கடற்கரைப் பகுதிக்குக் கீழே பல்வேறு சிறப்பு மிக்க பொருள்களும் 2,000 ஆண்டுகளுக்கு முன்